செ.வெ.எண்: 1 நாள்: 02.01.2018

**தமிழகத்திலேயே முதல் முறையாக இந்த ஆண்டிற்கான ஜல்லிக்கட்டு போட்டியினை புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், தச்சங்குறிச்சியில் தமிழகத்தில் முதல் முறையாக இந்த ஆண்டிற்கான ஜல்லிக்கட்டு போட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (02.01.2018) கொடியசைத்து துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மாடுபிடி வீரர்கள் ஜல்லிக்கட்டு உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர்.

இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 700 காளைகள் மற்றும் 120 மாடுபிடி வீரர்கள் பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டது. இப்போட்டியில் கலந்து கொண்ட காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்கள் முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு பிறகே போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது.

இந்த ஜல்லிக்கட்டு போட்டியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பேசியபோது தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு தமிழகத்திலேயே முதல்முறையாக சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் ஜல்லிக்கட்டு போட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் அதிகளவு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும் மாவட்டம் புதுக்கோட்டை மாவட்டமாகும். தமிழக அரசு ஒத்துழைப்புடன் இந்த ஆண்டு அனைத்து பகுதிகளிலும் ஜல்லிக்கட்டு போட்டி சிறப்பாக நடைபெறும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் செல்வி.கெ.எம்.சரயு.இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**